# காவடிச் சிந்து

- டி.எஸ்.பி.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னால் வரை தமிழ் நாட்டில் நடைபெற்று வந்த சங்கீதக் கச்சேரிகளின் பிற்பகுதியில் வித்வான்கள் ஓரிரண்டு திருப்புகழ்களையும் காவடிச் சிந்துகளையும் பாடுவது வழக்கம். இவற்றுக்குச் 'சில்லரை உருப்படிகள்' என்று பெயர். ராகம், தாளம், பல்லவி, சுரம் முதலிய கனமான பகுதிகள் முடிந்த பிறகு பாடப்பெறும் இச்சில்லரை உருப்பாடிகளை சபையோர் மிகவும் ரசிப்பார்கள்.

தானம், பல்லவி முதலியவற்றைப் புரிந்து கொள்ளமுடியாத பாமர மக்கள் கூடச் சில்லரை உருப்படிகளைச் சுவைத்து அனுபவிப்பது வழக்கம். கச்சேரிகளில் காவடிச் சிந்துகளைப் பாடும் மரபு பிற்காலத்தில் மறைந்து போனது தமிழின் துரதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும்.

காவடிச்சிந்து பாடவில்லை என்றால் ஜனங்கள் ஏமாந்து போவார்கள். ஒரு பெரிய வித்வான் ஓர் ஊரில் கச்சேரி செய்த பிறகு முடிவில் தமக்குக் காவடிச் சிந்துகள் பாடமில்லை என்று கூறிக் கச்சேரியை முடித்துவிட்டார். அவருக்குப் பாடம் கற்பிக்க நினைத்த ஊர் ஜனங்கள் ஒரு தட்டில் நூறு ரூபாய் நோட்டையும், அரையணா நாணயம் ஒன்றையும் வைத்து அளித்தனர். ''அரையணாக்காசு எதற்கு?'' என்று அவர் கேட்டபொழுது அவர்கள் ''தாங்கள் அடுத்தக் கச்சேரிகளுக்குப் போகுமுன் ஒரு காவடிச்சிந்து புத்தகம் வாங்கிப் பாடல்களைக் கற்றுக் கொள்வதற்கு'' என்று பதில் அளித்தனர். அக்காலத்தில் காவடிச் சிந்து புத்தகத்தின் விலை அரையணாத்தான்!

காவடிச்சிந்து எனப்படும் பிரபந்த வகையைப் பற்றிய குறிப்புகள் ஒரு தமிழ் நூலிலும் இருந்தாகத் தெரியவில்லை. பெரும்பாலும் இவை நாடோடிப் பாடல்களுள் சிந்து என்ற வகையைச் சேர்ந்தவை.

தமிழ்நாட்டில் தமிழ்க் கடவுளாகிய முருகன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தலங்களுக்கு அடியார்கள் காவடி எடுத்துக் செல்வது தொன்று தொட்ட வழக்கம். அச்சமயம் சேமக்கலம் அடித்துக் கொண்டு அவர்கள் பாடிச் செல்லும் சிந்துக்குக் காவடிச்சிந்து என்ற பெயர் அமைந்திருக்கலாம்.

பிற்காலத்தில் காவடிக் கூட்டங்களுடன் நாதசுரக்காரர்கள் காவடிச் சிந்துகளை வாசித்துக் கொண்டு செல்லும் வழக்கம் ஏற்பட்டது. அடியார்கள் பால்காவடி, மச்சக்காவடி, சர்ப்பக்காவடி முதலியவற்றைத் தோளின் மீது சுமந்து தங்கள் ஊர்களிலிருந்து குறிப்பிட்ட தலம் வரையில் கால்நடையாகச் செல்வார்கள். காவடிகளைச் சுமந்து கொண்டு கோயிற்படிகளில் ஏறும் சமயம் பால் பொங்குமென்றும், மீன்களும், பாம்புகளும் மீண்டும் உயிர்பெற்று எழுந்துவிடும் என்றும் கூறுவார்கள்.

தற்பொழுது தமிழ் இலக்கியத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கும் காவடிச் சிந்துகளின் ஆசிரியர் அண்ணாமலை ரெட்டியார் ஆவர். இவர் சிறந்த தமிழ்ப்புலவர். இவர் இயற்றிய தமிழ் இலக்கிய நூல்கள் தற்காலத்தில் பிரசுரத்தில் இல்லாததால் இவர் சிந்துகள் மாத்திரம் இயற்றியவர் என்று பலர் நினைக்கிறார்கள்.

ரெட்டியார், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிகுளம் என்ற சிற்றூரில் 1861-ஆம் ஆண்டில் பிறந்தவர். சிறு பருவத்திலேயே தமிழ்க்கல்வி கற்கத் தொடங்கிப் பின்னர் யமகம், திரிபு முதலிய சொல்லணிகளும், பொருள் நயமும் அமையச் செய்யுள் இயற்றும் திறன் படைத்தார்.

நல்ல இசையறிவு பெற்றவராதலால் தாம் இயற்றிய பாடல்களை வெவ்வேறு இராகங்களில் பாடிக் காட்டிக் கேட்போரை மகிழ்விக்கும் ஆற்றல் இவரிடம் அமைந்திருந்தது.

சேற்றூர் ஜமீன்தாராக இருந்த சுந்தர தாசுப் பாண்டியத் தேவரின் ஆதரவில் ரெட்டியார் சிலகாலம் இருந்து: பின்னர் திருவாடு துறையை அடைந்து அப்போது பட்டத்திலிருந்த சுப்பிரமணிய தேசிகரைக்கண்டு அவர் மீது தாம் பாடி வந்த ''அரசனகராதியர்'' என்ற செய்யுளைச் சமர்ப்பித்தார். அதன் இறுதியிலுள்ள 'அரசன்' என்ற சொல்லுக்குப் பொருள் கூறுமாறு தேசிகர் பணிக்க, ரெட்டியார் ''அரசன் என்றால் ரசம் இல்லாதவன்'' ''சுவையற்ற கோது போன்றவன்'' என்று விடை கூறினார். இதனைக் கேட்ட தேசிகர், ''நீ சாதியிலும் ரெட்டி; அறிவிலும்இரட்டு'' என்று கூறித் தமது ஆதினத்திலேயே ஓராண்டு வரை இருக்கச் செய்து இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்தனர்.

பின்னர் ரெட்டியார் ஊற்று மலை அரசராகிய இருதயாலய மருதப்பதேவரின் ஆதரவில் அரண்மனைப் புலவராக இருந்து வந்தார். இச்சமயத்தில்தான் இவருடைய இலக்கிய நூல்கள் இயற்றப் பெற்றன.

ஊற்றுமலை மன்னரின் ஆதரவில் இவர் இயற்றிய சித்திரக்கவிகள் பல. அரசர் ஒருநாள் புலவர்களை அழைத்து ''சரிகமபதநி'' என்ற ஏழெழுத்துக்களுடன் தொடங்கி ஒரு செய்யுள் அமைக்குமாறு கூற ரெட்டியார் ஒருவரே ''சரிகமபதநியேற்குச் சந்து சொலென்பாள்'' என்ற செய்யுளை இயற்றினார்.

முருகன் திருக்கோயில்களுக்குக் காவடியெடுத்துச் செல்லும் அன்பர்களின் விருப்பத்திற்கிணங்கி இவர் பல்வேறு சந்தங்களில் ஓசை நயம், பொருள், இனிமை முதலியவை அமைந்த காவடிச் சிந்துகளைப் பாடி வழங்கினார் என்று சிலரும், ஊற்றுமலை ஜமீன்தார் ஒரு முறை கழுகு மலைக்குக் காவடியெடுத்துச் சென்ற சமயம் அவருக்குக்களைப் புத்தோன்றாமல் இருப்பதற்காக ரெட்டியார் இச்சிந்துகளைப் பாடிக்கொண்டே சென்றார் என்று சிலரும் கூறுகிறார்கள்.

இவர் பாடிய மற்ற நூல்கள் வீரை அந்தாதி, வீரை நவநீத கிருஷ்ணன் பிள்ளைத் தமிழ், சங்கர நாராயணர் கோயில் திரிபந்தாதி, கருவை மும்மணிக் கோவை முதலியவை. ஊற்றுமலை மன்னர் பேரிலும் இவர் நூற்றுக்கணக்கான தனிப்பாடல்களைப் பாடியிருக்கிறார். இவற்றிலிருந்து இவர் யாப்பிலக்கணம் நன்கு கற்ற தமிழ்க் கவிஞர் என்பது தெளிவாகிறது.

ரெட்டியார் பாடியுள்ள காவடிச்சிந்துகள் தனிப்பாடல்கள் அல்ல. அவை உலா என்னும் பிரபந்த வகையில் அமைக்கப்பெற்றுள்ன. இவ்வகைப் பிரபந்தத்தில் பரமாத்மாவை நாயகனாகவும் ஜீவாத்மாவை நாயகியாகவும் சகி அல்லது பாங்கியை குருவாகவும் அமைத்துப் பாடுவது வழக்கம். இம்மரபை ஒட்டியே காவடிச் சிந்துகள் அடைவாக ஓர் உலா வடிவத்தில் அமைக்கப் பெற்றுள்ளன. மூதல் நாட்டை ராகத்தில் பிள்ளையார் துதியுடன் இரண்டாவதாக நாதநாமக்கிரி ராகத்தில் முருகன் துதியுடன் நூல் ஆரம்பமாகிறது. மூன்றாவது சிந்தில் கழுகுமலையின் வளம் அழகாக வருணிக்கப்படுகிறது.

மலையின் எழிலை ரெட்டியார்

''மோதுவாரிதி நீரை வாவி விண் மீதுலாவிய சீதளாகர முகில் பெருஞ் சிகர முற்று மூருதே - கண்டு மயிலினஞ்சிறகை விரித்தாடுமே''

என்று பாடுகிறார். பலாமரங்கள் நெருக்கிய தீங்கனி மதுரசத்தை வடிப்பதும், இந்திரன் உலகு கடந்து அப்புறமு' போய் நின்றசையும் சந்தன மரங்களும், காவின்மண்டு தேனையுண்டு மோகன முகாரி ராகம் பாடும் வண்டுகளும் கழுகு மலையின் வளத்தை விளக்குகின்றன. அடுத்த மூன்று சிந்துகள் கோயில், நகர், குளம் ஆகியவற்றின் அழகை விவரிக்கின்றன. பிறகு மூருகக் கடவுளின் வீரச்செயல்களும் பல அசுரர்களை அழித்த அவரது புய வலியும் விளக்கப் பெறுகின்றன.

பத்தாவது சிந்தில் நாயகியின் தாய் தன் மகளை முருகன் ''பாதி ராத்திரி வேளையில் வந்து மெள்ளக் கூவி கையைப் பற்றிக் கொண்டு'' சென்றதை நினைத்துப் புலம்புகிறார் - பின்னர் நாயகியின் விரகவேதனையும், நாயகன் வாரததைக் குறித்து அவள் சினந்து பாங்கியைத் தூது அனுப்புவதும் விவரிக்கப்படுகின்றன. ''தென்றல் புயல் போல் சீறுவதையும், உள்ளம் மெல்ல மெல்ல மூருகனென்று நினைந்து ருகுவதையும், நாயகிக்குப் பசும்பாலும், தேனும், கசந்திருப்பதையும்'' நாம் ரெட்டியாரின் தனி நடையில் படிக்கும்பொழுது பாரதியாரின் ''தூண்டிற்புழுவினைப்போல'' என்ற கண்ணன் பாட்டு நினைவிற்கு வாரமலிருக்காது. இறுதியில் கந்தன் நாயகியின் முன்பு தோன்றி

என் உடல் கனல் ஏறிய மெழுகாயிற்று.
உன் நெஞ்சுபசம் கல்லோ?

பொருசிலைவேற்குற மகளாகு நின்கயலாம் விழி யெனையே துயர்
செய்வது கண்டிலை யின்னமே

என்று வருத்தஞ்சாற்றி, மென்மலரைப் போன்ற அவள் கை தொட்டுத் திருமணம் செய்து கொள்கிறான்.

சந்த அமைப்பிற்காகவும், ஓசை நயத்திற்காகவும் ரெட்டியார் வடமொழிச் சொற்களைத் தமது சிந்துகளில் ஏராளமாக அமைத்திருக்கிறார். விகசித சித்ரகிகி, ஸரஸ ரஞ்சித, ஞான பரமானந்த, தந்த மாதங்கமுக, சததளநளின, சதகம விதி, சீதபத்மதள என்பது போன்ற சமஸ்கிருத சொற்றொடர்கள் அவர் ஆங்காங்கே பதித்திருக்கிறார்.

சிந்துகளை நாட்டை, நாத நாமக்கிரியை, ஆனந்த பைரவி, கன்னட பைரவி முதலிய கர்நாடக ராகங்களிலும், காபி, பெஹாக் தேசிய தோடி முதலிய ஹிந்துஸ்தானி ராகங்களிலும் ரெட்டியார் அமைத்திருந்த போதிலும், செஞ்சுருட்டி ராகத்தில் காவடிச் சிந்துக்கென்றே அமைந்த மெட்டே அவற்றிற்குத் தனிச்சிறப்பை அளிக்கிறது.

இச்சிறிய ராகத்தின் ரசத்தைப் பிழிந்து காவடிச் சிந்துகளில்அடைத்திருக்கிறார் என்று கூறுவதே பொருந்தும்.

1891 ஆம் ஆண்டு சென்னை ஆங்கிலேயப் பட்டாளத்தில் ஊழியம் புரிந்த காப்டன் தே என்பவர் எழுதிய ''தென்னிந்தியாவின் இசையும் - இசைக்கருவிகளும்'' என்ற நூலில் தஞ்சாவூரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

''ஆதிகாலம் முதலே தென்னிந்திய இசைக்கு தஞ்சாவூரே தலைநகரமாக விளங்கியது என்று கூறலாம். ஏனெனில் கர்னாடக இசையின் தலைசிறந்த வித்வான்கள் பலரும் அங்கு வசித்ததல்லாமல் வெளியூர்களில் இருந்து பல வித்வான்கள் தஞ்சைக்கு வந்து அவர்களிடம் இசை பயின்று தஞ்சாவூர் பாணியை எங்கும் பரப்பினர்''.

இது போலவே சரபோஜி மன்னருக்கு ஆசிரியனாக விளங்கிய சுவார்ட்ய் என்ற பாதிரி 1834 ஆம் ஆண்டு லண்டனில் எழுதிய ஒரு கட்டுரையில் ''காவிரி நதிப் பெருக்கால் வளம் பெற்ற தஞ்சை மாவட்டம் கவிதைக்கும், இலக்கியத்திற்கும், இசைக்கும், நாட்டியத்திற்கும் புகழ் பெற்று விளங்குகிறது'' என்று குறிப்பிடுகிறார். இதே கருத்தை தியாகராஜ ஸ்வாமிகள் ''முரிபெமுகலிகே'' என்ற கிருதியில் தஞ்சை மண்ணை ''சொகுசு மிகுந்த சோழ தேசம்'' என்று குறிப்பிடுவதில் வியப்பொன்றும் இல்லை.

இத்தகைய புகழ் பெற்று சோழநாட்டிலேதான் தமிழிசைக்கு ஆதாரமாக விளங்கும் தேவராமும் திவ்யப்பிரபந்தமும் தொகுக்கப் பெற்று இசையமைக்கப் பெற்றன. 63 நாயன்மார்களுள் 32 பேர்களும், பத்து ஆழ்வார்களுள் 3 பேர்களும் சோழ நாட்டு மண்ணில்

தோன்றியவர்கள். இராஜ இராஜ சோழனின் காலத்தில் தில்லை ஆலயத்தில் ஓர் அறையில் அடைக்கப்பட்டிருந்த தேவாரப் பாடல்கள் கண்டுபிடிக்கப் பெற்றன.

பின்னர் இவற்றிற்கு நம்பியாண்டார் நம்பி என்ற இசை வல்லுநர் மரபின்படி இசையமைத்தது அனைவரும் அறிந்த விஷயம். இவ்விதமே நாலாயிர திவ்யப்பிரபந்தம் என்ற வைணவ மறை, வீர நாராயணபுரத்தைச் சேர்ந்த நாதமுனி என்ற வைணவப் பெரியாரால் தொகுக்கப் பெற்று இசை அமைக்கப் பெற்றது. இவரை வேதாந்த தேசிகன் என்ற வைணவப் பெரியார் ''தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்'' என்று போற்றுகிறார். நம்பியாண்டார் நம்பிக்கு திருநீல கண்ட யாழ்ப்பாணரின் மரபில் வந்த ஒரு மாது தேவாரத்திற்கு இசை அமைப்பதில் உதவி புரிந்தது போல் நாத மூனிகளுக்கு அவருடைய மருமக்களாகிய கீழையகத் தாழ்வார், மேலையகத்தாழ்வார் என்ற இரு இசை வல்லுநர்கள் திவ்ய பிரபந்தத்திற்கு இசையமைப்பதில் ஒத்துழைத்தனர்.

மேலும் நாதமுனிகள் காலத்தில் தான் திருவரங்கம் திருக்கோயிலில் வைணவர்கள் இசைபாடி அபிநயம் பிடிக்கும் வழக்கமும் ஏற்பட்டு இவர்கள் 'அரையர்கள்' என்று அழைக்கப்பட்டனர். ஆகவே தேவார இசையும் பிரபந்த இசையும் சோழநாட்டு மண்ணிலேயே தோன்றின என்று கூறுவது மிகையாகாது. சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் சேரன் தம்பி என்று கூறப்பட்ட போதிலும் அவர் எழுதிய காவியத்தின் முக்கிய பிரபந்தகளாகிய கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோர் சோழநாட்டின் தலைநகராக விளங்கிய காவிரிப் பூம்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே சிலப்பதிகாரத்தில் விவரிக்கப்படும் இசையும், நாட்டியமும் சோழ நாட்டைச் சேர்ந்தவையே ஆகும்.

சைவ சமயக் குரவர்களில் தலைசிறந்தவர் என்று கருதப்பெறும் ஞானசம்பந்தரும் நாலு கவிப் பெருமாள் என்று போற்றப்படும் திருமங்கை யாழ்வாரும் சோழ நாட்டைச் சேர்ந்தவர்களே. இவர்கள் இயற்றிய நூற்றுக்கணக்கான பாடல்களே தேவார இசைக்கும், திவ்வியப்பிரபந்த இசைக்கும் அஸ்திவாரமாக இன்றும் விளங்கி வருகின்றன.

சோழ மன்னர்களின் ஆதிக்கம் மங்கிய பின்னர் தமிழ்நாட்டின் மீது டில்லி மகமதியர்கள் படையெடுத்து இராமேஸ்வரம் வரையில் தம் வசப்படுத்திக் கொண்டனர். மகமதியர்கள் ஆட்சி புரிந்த சுமார் ஐம்பது வருடகாலம் தமிழ் நாட்டின் கலைகள் ஆதரவற்று மறையலாயின.

1370-ஆம் ஆண்டு விஜயநகர சாம்ராஜ்ஜியத்தைச் சேர்ந்த வீரகம்பண்ணா மகமதியரின் ஆட்சியை ஒழித்த பின்னர் தஞ்சையிலும், மதுரையிலும் நாயக்க மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டது. தற்காலத்தில் கர்னாடக சங்கீதம் என்று அழைக்கப்பெறும் இசை முறைக்கு 1350 ஆம் ஆண்டு விஜயநகரத்தில் வாழ்ந்திருந்த வித்யாரண்யர் என்ற துறவி எழுதிய 'ஸங்கீத சாரம்' என்ற நூலே அடிப்படையாக அமைந்தது.

பின்னர் 1550 ஆம் ஆண்டு விஜய நகரத்தில் இராமாமாத்யர் என்ற இசை வல்லுநர் 'ஸ்வரமேள கலாநிதி' என்ற மாபெரும் நூலை எழுதினார். தஞ்சையில் நாயக்க மன்னர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு தென்னிந்திய இசையின் மையம் விஜயநகரத்தில் இருந்து தஞ்சைக்கு மாறியது. தென்னிந்திய இசையின் மாபெரும் நூல்களாகிய கோவிந்த தீக்ஷிதர் இயற்றிய ஸங்கீத சுதாநிதி, அவருடைய மகன் இயற்றிய சதுர்தண்டி பிரகாசிகை, துளஜா மன்னர் இயற்றிய ஸங்கீத ஸாராம்ருதம், கோவிந்தர் இயற்றிய ஸங்க்ரஹ சூடாமணி ஆகிய நூல்கள் தஞ்சை நகரிலேயே இயற்றப்பட்டன. மேலும் நாயக்க மன்னர்களின் ஆட்சியில் நூற்றுக்கணக்கான இசை வல்லுநர்களும், நாட்டிய மணிகளும், கவிஞர்களும் சோழநாட்டில் குடியேறினர்.

''தென்னிந்திய இசையின் பொற்காலம்'' என்று போற்றக்கூடிய இக்காலத்தில்தான் பழைய தமிழ் இசையும், விஜயநகரத்திலிருந்து வந்த கருநாடக இசையும் ஒன்று கலந்து தற்போது வழங்கி வரும் இசைமுறை உருவாயிற்று.

இச்சமயத்தில்தான் கருநாடக இசையின் புதுவடிவங்களாகிய வர்ணம், ஸ்வர ஜதி, கீர்த்தனை, பதம், ஜாவளி, தில்லானா முதலியவை இயற்றப்பட்டன. திருவண்ணாமலையில் வாழ்ந்திருந்த அருணகிரிநாதர் தான் பாடிய தமிழ்ப்பண்களில் இந்தக் கால கட்டத்தில் புதிதாக வந்த கருநாடக இராகங்களிலும் நூற்றுக்கணக்கான திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி முருகப்பெருமானுக்குச் சூட்டினார் என்பது அனைவரும் அறிந்த விஷயம். சந்தம் என்ற பாவகையில் அருணகிரி நாதர் முடிசூடா மன்னராக விளங்கினார்.

தஞ்சையில் நாயக்க மன்னர்களின் ஆட்சிக்குப் பிறகு மராட்டிய அரசர்களின் ஆட்சி ஏற்பட்டது. சிவாஜியின் ஒன்று விட்ட சகோதரராகிய ஏகோஜி என்பவரால் ஸ்தாபிக்கப் பெற்ற மராட்டிய ஆட்சி சுமார் இருநூறு ஆண்டுகள் வரை இருந்தது. நாயக்க மன்னர்களின் ஆட்சியின் போது தோன்றிய பொற்காலம் மராட்டிய மன்னர்களின் ஆட்சியிலும் தொடர்ந்து விளங்கிற்று.

இக்காலத்தில் தான் கருநாடக ஸங்கீதத்தின் மும்மூர்த்திகள் என்று அழைக்கப்பெறும் தியாகராஜர், தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகிய மூன்று இணையற்ற இயலிசைப் புலவர்கள் தோன்றினர். இவர்களுக்கு ஏறக்குறைய சம காலத்திலேயே முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தா பிள்ளை, கோபாலகிருஷ்ணபாரதி முதலியோர் கருநாடக இராகங்களில் நூற்றுக்கணக்கான இசை வடிவங்களை இயற்றி ஸங்கீதத்தை வளம்பெறச் செய்தனர்.

மும்மூர்த்திகளின் காலத்திற்குப் பின்னரும் சுமார் நூறு ஆண்டுகள் வரையில் தஞ்சையில் வாழ்ந்திருந்த பல இயல் இசைப் புலவர்கள் தமிழ், தெலுங்கு, வடமொழி முதலிய பாஷைகளில் பாடல்கள் இயற்றியதால் தஞ்சை மாநகரம் கருநாடக இசைக்குத் தலைநகர் என்ற பெருமையைப் பெற்றது.

தற்காலத்தில் பரதநாட்டியம் என்று வழங்கும் நாட்டிய வகை கூத்து, சின்னமேளம், சதிர் என்ற பெயர்களால் அழைக்கப்பெற்று வந்தது. இது முற்றிலும் தமிழ் மண்ணிலேயே தோன்றிய ஒரு நடன வகையாகும். சிலப்பதிகாரத்தின் கதாநாயகியாகிய மாதவி ஒரு நாட்டியக் கணிகையாதலால் இளங்கோவடிகள் மாதவி ஆடிய பதினொன்று ஆடல் வகைகளைக் குறித்துத் தமது காவியத்தில் விவரமாகக் குறிப்பிடுகிறார்.

இதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையை ஆராய்ந்தால் தற்காலத்து பரதநாட்டியத்தில் ஆடப்பெறும் பலவித ஆடல்கள் சிலப்பதிகாரக் காலத்திலேயே வெவ்வேறு பெயர்களுடன் ஆடப்பெற்றதாக நாம் ஊகிக்கலாம். மாதவியின் அரங்கேற்றம் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு சோழ மன்னனின் முன்னிலையில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது வழங்கும் பரத நாட்டியத்திற்கு அஸ்திவாரமும் தஞ்சை மாநகரிலேயே தான் இடம் பெற்றது. சரபோஜி மன்னர் காலத்தில் தஞ்சை பெரிய கோயிலில் நட்டுவாங்கம் புரிந்து வந்த தஞ்சை நால்வர் எனப்பெறும் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய நாட்டியாசிரியர்கள் அமைத்த அலாலிப்பு - தில்லானா நாட்டிய அமைப்பு இன்று வரையில் தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த வரிசைப் படி தஞ்சை நால்வர் தமிழிலும், தெலுங்கிலும் ஏராளமான பொருத்தமான இசை வடிவங்களை அமைத்து பரத நாட்டியக் கலைக்குத் தொண்டு புரிந்தனர்.

ஆககே தற்காலத்திய தென்இந்திய இசையும், உலகப் புகழ் பெற்று விளங்கும் பரதநாட்டியக் கலையும் தஞ்சையிலேயே தோன்றி வளர்ந்து ஒளி பெற்றன என்பது ஒவ்வொரு தமிழனும் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.